# அரசியல் சட்டத்திருத்தங்கள்

## (முக்கியமான திருத்தங்களே குறிப்பிடப்படுகின்றன)

**1ஆவது திருத்தம் (1951):**

(திருத்தப்பட்ட பிரிவுகள் 15, 19, 31, 85, 87, 174, 176, 341, 342, 372, 376) ஒன்பதாவது அட்டவணை சேர்க்கப் பட்டது. அடிப்படை உரிமைகளின் செயலாக்கத்தில் ஏற்பட்ட சில தடைகளை நீக்குவதே இத்திருத்தத்தின் முக்கிய குறிக்கோள். சட்டத்தின் முன் சமத்துவ உரிமை, பேச்சுரிமை, சொத்துரிமை முதலியவைகளில் மாற்றங்கள் செய்யப்பட்டன. பின்தங்கிய வகுப்பினர், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி வகுப்பினரின் முன்னேற்றத்திற்காக தனிப்பட்ட முன்னுரிமை அளிக்க வழி வகுக்கப்பட்டது)

**2ஆவது திருத்தம் (1952) (பிரிவு 81):**

பாராளுமன்ற உறுப்பினர்களின் தேர்வுக்குண்டான மக்கள் தொகை வரையறை நீக்கப்பட்டது.

**3ஆவது திருத்தம் (1955) (ஏழாம் அட்டவணை):**

மாநிலப் பட்டியலிலிருந்து (State List), ஒருங்கிணைந்த பட்டியலுக்குச் சில பொருட்கள் (Items) கொண்டு வரப்பட்டன. இதனால் மத்திய அரசு இவைகளின் மீது சட்டம் இயற்ற வழி வகுத்தது (ஒருங்கிணைந்த பட்டியல் - வரிசை எண் 33)

**4ஆவது திருத்தம் (1955):**

(பிரிவுகள் 31, 31A, 305 அட்டவணை ஒன்பது)

**5ஆவது திருத்தம் (1955):**

(பிரிவு 3) ஒரு மாநிலத்தின் பரப்பளவில் மாற்றம் செய்யும் பொழுது கடைப்பிடிக்க வேண்டிய செயல்முறை பற்றியது.

**6ஆவது திருத்தம் (1956):**

(பிரிவுகள் 269, 286 மற்றும் ஏழாம் அட்டவணை) மாநிலங்களுக் கிடையே உண்டான விற்பனை வரியைப் பற்றியது. ஏழாம் அட்டவணையில் புதிதாகப் பொருட்கள் (Items) சேர்த்தல், மத்தியப் பட்டியல் வரிசை எண் 92A மாநிலப் பட்டியல் வரிசை எண் 54.

**7ஆவது திருத்தம் (1956):**

முதல் தடவையாக மிகப் பரந்த அளவில் பல்வேறு பிரிவு களிலும் அட்டவணைகளிலும் மாற்றம் செய்யப்பட்டன. முக்கிய மாக மொழிவாரி மாநிலங்கள் ஏற்பட்டதை முன்னிட்டு மாற்றங்கள் செய்யப்பட்டன. முதலாம் மற்றும் நான்காம் அட்டவணைகளில் பரந்த மாற்றங்கள் செய்யப்பட்டன.

**8ஆவது திருத்தம் (1960):**

(பிரிவு 334) மக்களவை மாநில அவைகளில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி வகுப்பினருக்குண்டான இட ஒதுக்கீடு அடுத்த பத்தாண்டுக்கு நீடிக்கப்பட்டது.

**9ஆவது திருத்தம் (1960):**

(முதலாம் அட்டவணை) இந்தியா பாகிஸ்தானுக்கு இடையில் நடந்த ஒப்பந்தங்களை முன்னிட்டு அஸ்ஸாம், பஞ்சாப், மேற்கு வங்காளம் மற்றும் திரிபுராவிலிருந்து சில பகுதிகளை பாகிஸ்தானுக்கு கொடுத்ததால், திருத்தங்கள் செய்யப்பட்டன.

**10ஆவது திருத்தம் (1961):**

(பிரிவு 240 மற்றும் முதலாம் அட்டவணை) தாத்ரா நாகர் ஹவேலி மத்திய அரசுப் பகுதியானதை முன்னிட்டு திருத்தம் செய்யப்பட்டது.

**11ஆவது திருத்தம் (1961):**

(பிரிவுகள் 66(1), 71(3), துணைக் குடியரசுத் தலைவர் தேர்ந் தெடுக்கப்படுவதற்கு இரு மன்றங்களின் ஒருங்கிணைந்த கூட்டம் (Joint Sitting of Both the Houses) தவிர்ப்பு. குடியரசுத் தலைவர்,

துணைக் குடியரசுத் தலைவர் இருவரையும் தேர்ந்தெடுக்க வேண்டிய உறுப்பினர்களின் சிலர் பதவி காலியாக இருப்பதை வைத்து இருவர் தேர்தலும் செல்லுபடியாகாது என்ற நிலை நீக்கல்.

12ஆவது திருத்தம் (1962):

(பிரிவு 240, அட்டவணை ஒன்று) கோவா, டாமன், டையூ இந்தியாவோடு இணைந்து மத்திய அரசுப் பகுதியானதை ஒட்டி.

13ஆவது திருத்தம் (1962):

(பிரிவு 371A சேர்க்கை). நாகலாந்து தனி மாநிலமாகியதை ஒட்டி திருத்தம் செய்யப்பட்டது. நாகலாந்தின் தனிப்பட்ட கலாச் சாரத்தைப் பாதுகாக்கத் தனியான அந்தஸ்து தரல்.

14ஆவது திருத்தம் (1962):

(பிரிவுகள் 81, 239A) முன்னாள் பிரெஞ்சுப் பகுதியான புதுச் சேரி, காரைக்கால், மாஹே, ஏனாம் மத்திய அரசுப் பகுதிகளாதல்; மத்திய அரசுப் பகுதிகளாயிருந்த இமாச்சலப் பிரதேசம், மணிப்பூர், திரிபுரா, கோவா, டாமன், டையூ, புதுச்சேரி முதலியவைகளுக்கு சட்ட சபைகள் ஏற்படுத்தல். மக்களவையில் மத்திய அரசுப் பகுதி களுக்கு பிரதிநிதிகள் 20லிருந்து 25 ஆக உயர்த்துதல்.

15ஆவது திருத்தம் (1963):

(பிரிவுகள் 124, 128, 217, 222, 224, 224A, 311, 316 ஒன்றியப் பட்டியலில் 78ஆம் வரிசை எண்) உயர் நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு வயது 60லிருந்து 62 ஆக உயர்தல். அரசுப் பணியாளர் களுக்கு எதிரான ஒழுங்கு நடவடிக்கையில் மேல் முறையீட்டு வாய்ப்பை இரண்டிலிருந்து ஒன்றாகக் குறைத்தல்.

16ஆவது திருத்தம் (1963):

(பிரிவுகள் 19, 84, 173, 3ஆவது அட்டவணை) இந்தியா வின் இறையாண்மை ஒருமைப்பாடு கருதி அடிப்படை உரிமை களில் தடைகள் ஏற்படுத்துதல்; பாராளுமன்ற உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்தல் பற்றியது.

17ஆவது திருத்தம் (1964):

(பிரிவு 31அ, 9ஆம் அட்டவணை) நிலச் சொத்து (Estate) என்பதன் பொருள் விரிவாக்கம் செய்யப்பட்டது; நிலச் சீர்திருத்தம் பற்றிய 44 மாநிலச் சட்டங்கள் 9ஆவது அட்டவணையில் சேர்க்கப்பட்டன.

18ஆவது திருத்தம் (1966):

(பிரிவு 3) - பஞ்சாப், ஹரியானா என்ற இரு மாநிலங்கள் ஏற்பட்டதைத் தொடர்ந்து திருத்தம் செய்யப்பட்டது. மாநிலத்தையோ மத்திய ஆட்சிப் பகுதியையோ உருவாக்க பாராளுமன்றத்திற்கு அதிகாரம் உண்டு என்று கூறும் வகையில் பிரிவு 3இல் ஒரு விளக்கம் சேர்க்கப்பட்டது.

19ஆவது திருத்தம் (1966):

(பிரிவு 324) தேர்தல் குழுமத்தின் கடமைகளைப் பற்றிய விளக்கம்.

20வது திருத்தம் (1966):

பிரிவு 233அ சேர்க்கப்பட்டது. மாவட்ட நீதிபதிகளின் நியமனமும், அவர்கள் வழங்கும் தீர்ப்புரையும் இன்ன பிறவும் செல்லுபடியாகும் என்பது பற்றியது.

21ஆவது திருத்தம் (1967):

எட்டாவது அட்டவணையில் சிந்தி மொழி சேர்க்கப்பட்டது.

22ஆவது திருத்தம் (1969):

(பிரிவுகள் 244A, 371B, 275) அஸ்ஸாம் மாநிலத்திற்குள் சுயாட்சி பெற்ற பகுதியாக மேகாலயாவைத் தோற்றுவித்தல்.

23ஆவது திருத்தம் (1970):

(பிரிவுகள் 330, 332, 333, 334) தாழ்த்தப்பட்ட, பழங்குடி யினருக்குண்டான ஒதுக்கீடுகள் அடுத்து பத்தாண்டு வரை நீட்டித்தல்.

24ஆவது திருத்தம் (1971):

(பிரிவுகள் 13, 168) அடிப்படை உரிமைகளைத் திருத்தம் செய்ய பாராளுமன்றத்திற்கு உரிமை இல்லை என்று கோலக்நாத் வழக்கில் (1967 SC 1643) உச்ச நீதிமன்றத்தினால் அளிக்கப்பட்ட தீர்ப்பின் விளைவை நீக்க இந்த திருத்தம் செய்யப்பட்டது. பிரிவு 13(4) புதிதாகச் சேர்க்கப்பட்டது. பிரிவுகள் 368(1)&(3)ம் சேர்க்கப் பட்டன. 368ம் பிரிவின் அடிப்படையில் செய்யப்படும் திருத்தங் களுக்குக் குடியரசுத் தலைவர் கண்டிப்பாக அனுமதி அளித்தே தீர வேண்டும் எனவும் கொண்டு வரப்பட்டது.

25ஆவது திருத்தம் (1971):

(பிரிவு 31(2) திருத்தம்; 31(2A) 31C சேர்க்கப்பட்டன) அரசால் கையகப்படுத்தப்படும் நிலங்களுக்கு இழப்பீடு போத வில்லை என்று நீதிமன்றங்கள், கையகப்படுத்துவதைச் செல்லாதது என அறிவிக்க முடியாது; இழப்பீடு (Compensation) என்ற சொல்லுக்கு பதிலாகத் தொகை என்ற சொல் சேர்க்கப்பட்டது.

(பிரிவு 39(b)&(c)) வழிநடத்தும் கொள்கைகள் முன்னிட்டு நிலக் கையடக்கங்கள் செய்யப்பட்டால் அடிப்படை உரிமை களைப் பாதிக்கிறது என்று நீதிமன்றங்களுக்குச் செல்ல முடியாது.

26ஆவது திருத்தம் (1971):

(பிரிவுகள் 291, 362 நீக்கப்பட்டன; பிரிவு 363A சேர்க்கப் பட்டது; பிரிவு 366(22) திருத்தம் செய்யப்பட்டது) பழைய மன்னர்களுக்கு அளித்த தனி அந்தஸ்து நீக்கப்பட்டது. மன்னர் மானியம் ஒழிக்கப்பட்டது.

27ஆவது திருத்தம் (1971):

(பிரிவுகள் 239A, 239B, 240, 371C) மிசோராமும் அருணாச்சலப் பிரதேசமும் மத்திய அரசுப் பகுதிகளாக உருவாக்கப்பட்டன.

28ஆவது திருத்தம் (1972):

பழைய ICS அதிகாரிகளுக்கு அளிக்கப்பட்டிருந்த சலுகைகள் நீக்கப்பட்டன.

29ஆவது திருத்தம் (1972):

(ஒன்பதாவது அட்டவணை) கேரள மாநில இரு நிலச்சீர் திருத்த சட்டங்கள் 9ஆவது அட்டவணையில் சேர்க்கப்பட்டன.

30ஆவது திருத்தம் (1972):

(பிரிவு 133(1)) வழக்கின் மதிப்பைப் பொறுத்து உச்ச நீதி மன்றத்தில் முறையிடும் (Appeal) நிலையை மாற்றி நுணுக்கமான சட்டத் தீராய்வுகள் (Substantial Question of Law) தேவைப்படும் வழக்குகளை அனுமதிக்கும் முறை ஏற்பட்டது.

31ஆவது திருத்தம் (1973):

(பிரிவுகள் 81, 330A, 332) மக்களவையில் தேர்ந்தெடுக்கப் படும் உறுப்பினர்கள் எண்ணிக்கை 525லிருந்து 545 ஆக உயர்தல்.

32ஆவது திருத்தம் (1974):

(பிரிவு 371, அட்டவணை 7, பட்டியல் 1 எண் 63) ஆந்திர மாநிலத்திற்கான ஆறு செயலாக்க முறைகள் (Programmes) ஏற்படுத்துதல்.

33ஆவது திருத்தம் (1974):

(பிரிவு 101, 190) பாராளுமன்ற, மாநில அவைகளின் உறுப்பினர்களின் பதவி விலகல் மடல்கள் எந்தவித நிர்ப்பந்தமும் இல்லாத நிலையில் மட்டும் ஏற்றல்.

34ஆவது திருத்தம் (1974):

(9ஆம் அட்டவணை) 20 நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் சேர்க்கப்பட்டன.

35ஆவது திருத்தம் (1975):

(பிரிவுகள் 2A, 80, 81) சிக்கிம் இந்தியாவின் ஒரு இணைந்த மாநிலமாக (Associate State)ச் சேர்தல்.

36ஆவது திருத்தம் (1975):

சிக்கிமை இந்தியாவுடன் ஒரு மாநிலமாகச் சேர்த்தல்.